# 21.SITUATION RELATED PROBLEMS [COMMON]

1. அன்பு, பிரபு, சீனி, டேவிட், ஈஷா என்பவர்கள் ஒருவர் பின் ஒருவராக பாட்டு பாடுகின்றார்கள். முதலாவதாக பாடும் நபருக்கு அடுத்து சீனி பாடுகிறார். கடைசியாக பாடுபவர், அன்புக்கு அடுத்து பாடுகிறார். ஈஷா முதலாவதாகவும் கடைசியாகவும் பாடவில்லை. பிரபுவுக்கும் அன்புவுக்கும் இடையில் இரண்டுபேர் பாடுகின்றனர். எனில் கடைசியாக பாடியவர் யார்?

   1) அன்பு 2) பிரபு
   3) டேவிட் 4) சீனி

2. சேகர், பீட்டரை விட உயரமானவர். ஆனால் மோகனை விட குள்ளமானவர். கோவிந்த் விஸ்வாவை விட குள்ளமானவர். மற்றும் விஸ்வா, பீட்டரைப் போல் உயரமானவர் இல்லை. அவர்கள் அனைவரும் அவர்களின் உயரங்களின் அடிப்படையில் நின்றால், நடுவில் நிற்பவர் யார்?

   1) மோகன் 2) பீட்டர்
   3) விஸ்வா 4) கோவிந்த்

3. ஆங்கில புத்தகமானது உயிரியல் புத்தகத்தை விட இலேசானது. வேதியியல் புத்தகம், இயற்பியல் புத்தகத்தைவிட இலேசானது. உயிரியல் புத்தகமானது, வேதியியல் புத்தகத்தின் எடைக்குச் சமமானது. மிகவும் இலேசான புத்தகம் எது?

   1) உயிரியல் 2) வேதியியல்
   3) ஆங்கிலம் 4) இயற்பியல்

4. ஏழு நபர்கள் இராணுவ அணிவகுப்பில் நின்று கொண்டிருக்கின்றனர். Q-என்பவர் R-என்பவருக்கு இடது புறமாகவும், P-என்பவருக்கு வலதுபுறத்திலும் நிற்கின்றார். O-என்பவர்

N-ன் வலதுபுறமாகவும் P-க்கு இடது புறத்திலும் நிற்கின்றார். S-என்பவர் R-ன் வலப்புறத்திலும் T-க்கு இடது புறமாகவும் நிற்கின்றார். எனில், வரிசையின் நடுவில் அமர்ந்திருப்பவர் யார்?

1) S　　2) T
3) P　　4) Q

**வழிமுறை (வினா எண் 5 - 9)**

A, B, C, D மற்றும் E என்ற ஐந்து ஆசிரியர்கள் பின்வருமாறு பாடங்களை கற்பிக்கின்றனர்.

(i) A மற்றும் B ஆகியோர், வரலாறு, குடிமையியல் மற்றும் கணிதத்தை கற்பிக்கின்றனர்.

(ii) C மற்றும் B ஆகியோர் புவியியல், கணிதம் மற்றும் பொருளியல் பாடத்தை கற்பிக்கின்றனர்.

(iii) D மற்றும் A ஆகியோர் பொருளியல்,வரலாறு மற்றும் குடிமையியல் பாடத்தை கற்பிக்கின்றனர்.

(iv) E மற்றும் D ஆகியோர் வரலாறு, புவியியல் மற்றும் பொருளியல் பாடத்தை கற்பிக்கின்றனர்.

**கீழே கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு மாற்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.**

5. எந்தப் பாடம் அனைத்து ஆசிரியர்களாலும் கற்பிக்கப்படுகிறது?

1) வரலாறு　　2) புவியியல்
3) குடிமையியல்　　4) பொருளியல்

6. எந்த ஆசிரியர் அனைத்துப் பாடங்களையும் கற்பிக்கின்றார்?

1) A 2) B

3) C 4) D

7. எந்தப் பாடம் D என்பவரால் கற்பிக்கப்படவில்லை ?

1) புவியியல் 2) குடிமையியல்

3) பொருளியல் 4) கணிதம்

8. எந்தப்பாடம் A என்பவரால் கற்பிக்கப்படவில்லை ?

1) வரலாறு 2) புவியியல்

3) குடிமையியல் 4) பொருளியல்

9. E மற்றும் C ஆகிய இருவரால் இணைந்து கற்பிக்கப்படும் பாடம் எது?

1) புவியியல் மற்றும் வரலாறு

2) வரலாறு மற்றும் பொருளியல்

3) பொருளியல் மற்றும் கணிதம்

4) பொருளியல் மற்றும் புவியியல்

வழிமுறை ( வினா எண் 10 - 12)

கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனமாகப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி.

குமார், மணி, ராஜா, சதீஸ் மற்றும் சக்தி ஆகிய ஐந்து பேரும் சீட்டு விளையாடுகின்றனர். ஒவ்வொரும் 9 சீ ட் டு க ள் பெற்றுள்ளனர். மீதமுள்ள சீட்டுகள் மேசையில் உள்ளன. குமார் என்பவர் சதீஸ்க்கு இரண்டு

சீட்டுகளையும், சதீஸ் நான்கு சீட்டுகளை ராஜாவுக்கு கொடுக்கின்றனர். ராஜா 2 சீட்டுகளை மணிக்கு கொடுக்கிறார். சக்தி மூன்று சீட்டுகளை குமாருக்கும் கொடுக்கின்றார்.

10. குமார் வைத்திருக்கும் சீட்டுகளின் எண்ணிக்கை எத்தனை ?

1) 10 2) 9 3) 11 4) 12

11. மணி வைத்திருக்கும் சீட்டுகளின் எண்ணிக்கை எத்தனை ?

1) 10 2) 11 3) 15 4) 7

12. ராஜா வைத்திருக்கும் சீட்டுகளின் எண்ணிக்கை எத்தனை ?

1) 19 2) 20 3) 9 4) 11

13. A, B, C, D, மற்றும் E என்ற ஐந்து வீடுகள் ஒரே வரிசையில் அமைந்துள்ளன. A என்ற வீடு Cக்கு வலதுபுறமாகவும் E க்கு இடதுபுறமாகவும் அமைந்துள்ளது. E என்ற வீடு B க்கு இடதுபுறமாகவும், B என்ற வீடு D க்கு இடதுபுறமாகவும் அமைந்துள்ளது. எனில், நடுவில் அமையும் வீடு எது?

1) B 2) C 3) D 4) E

14. A, B, C, D, மற்றும் E ஆகியோர் ஒரு இருக்கையில் அமர்ந்துள்ளனர். A மற்றும் B அருகருகிலும், C மற்றும் D அருகருகிலும் அமர்ந்துள்ளனர். ஆனால் D என்பவர் E-யுடன் அமரவில்லை, ஏனெனில் E என்பவர் இருக்கையின் இடது ஓரத்தில் அமர்ந்துள்ளார். C என்பவர் வலதுபுறத்திலிருந்து இரண்டாவது இடத்திலும் A என்பவர் B, E க்கு வலதுபுறத்திலும் அதேவேளையில் C உடனும் அமர்ந்துள்ளார். எனில், Aன் நிலை யாது?

1) B மற்றும் D-க்கு இடையில்

2) B மற்றும் C-க்கு இடையில்

3) E மற்றும் D-க்கு இடையில்

4) C மற்றும் E-க்கு இடையில்

15. ஐந்து பத்திரிக்கைகள் ஒரு மேசையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. M என்பது F ன் மேல் மற்றும் H என்பது Gன் கீழ் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. Fஎன்பது Gக்கு மேற்புறமாகவும் I என்பது H-ன் கீழும் உள்ளது. எந்த பத்திரிக்கை நடுவில் உள்ளது?

1) M 2) F 3) G 4) I

16. ஐந்து பேர் ஒரு வரிசையில் நின்று கொண்டிருக்கின்றனர். B என்பவர் C-க்கு இடதுபுறமாக நிற்கின்றார். D என்பவர் E-க்கு வலதுபுறமாக நிற்கின்றார். A என்பவர் B-க்கு இடதுபுறமாக நின்றால், நடுவில் நிற்கும் நபர் யார்?

1) D 2) C
3) E 4) A

வழிமுறை : ( 17 - 20 )

A, B, C, D, E மற்றும் F என்ற ஆறு பேர் உள்ளனர். C என்பவர் F ன் சகோதரி ஆவார். B என்பவர் E ன் கணவரின் சகோதரர் ஆவார். D என்பவர் A ன் தந்தையும் F ன் தாத்தாவும் ஆவார். இரண்டு தந்தைகளும், மூன்று சகோதரர்களும், ஒரு தாயும் அக்குழுவில் உள்ளனர்.

17 அக்குழுவில் உள்ள பெண் உறுப்பினர்கள் ?

1) E, A 2) E, F

3) F,D 4) E, C

18. அக்குழுவில் உள்ள தந்தையர்கள்?

1) A, F 2) A, B

3) A,D 4) A, E

19. அக்குழுவில் உள்ள ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

1) 2 2) 3

3) 4 4) 5

20. கீழ்க்கண்ட எது சகோதரர்களைக் கொண்ட குழுவைக் குறிக்கிறது?

1) ABF 2) ABD
3) BFC 4) BDF